

திருவாரூரில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கி தரப்பட்ட மத்திய பல்கலைக்கழகத்தின் பத்தாவது ஆண்டு பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, ஆளுநர் ஆர். என்.ரவி, உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், சமூக நலத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், வேந்தர் பேராசிரியர் பதமநாபன், துணைவேந்தர் பேராசிரியர் கிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனைய வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஆம்னி பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகத்தின் கட்டுமானப் பணிகளை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 01.09.2025 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், முசிறி சட்டமன்ற உறுப்பினர் ந.தியாகராஜன், நகரப் பொறியாளர் சிவபாதம், மாவட்ட நகர் ஊரமைப்புக்குழு உறுப்பினர் க.வைரமணி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் தந்த

# திருவாரூர் மத்திய பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழா!

## குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு-அமைச்சர்கள்–முனைவர் கோவி,செழியன்- பெ,கீதாஜீவன் பங்கேற்பு!

திருவாரூர்,செப்.5-

திருவாரூரில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கி தரப்பட்ட மத்திய பல்கலைக்கழகத்தின் பத்தாவது ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, ஆளுநர் ஆர். என்.ரவி, உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், சமூக நலத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் உள்ளிட்டோர். தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றனர்.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகத்தின் 10ஆவது பட்டமளிப்பு விழா, மத்தியப் பல்கலைக்கழகத்தின் மேன்மையரும், குடியரசுத் தலைவருமான திருமதி. திரௌபதி முர்மு முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு பல்கலைக்கழக வேந்தரும், பத்ம பூஷண் மற்றும் விஞ்ஞான் ரத்னா விருதுகளைப் பெற்றவருமான பேராசிரியர். ஜி. பத்மநாபன் தலைமை வகித்தார். உடன் ஆளுநர் ஆர். என்.ரவி, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், தமிழ்நாடு அமைச்சர்கள் முனைவர் கோவி. செழியன், பெ.கீதா ஜீவன் மற்றும் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ஜி.பத்மநாபன் மற்றும் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர். எம். கிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், பேராசிரி யர்கள், ஊழியர்கள், ஆய்வு பட்ட மாணவர்கள், மாணவர்கள் மற்றும் குடும்பத்தி னர் திரளாக கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், 2009 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி தமிழ்நாட்டின் திருவாரூர் மாவட்டத்தில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முயற்சியால் திருவாரூர் நீலக்குடியில் அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், 13 கல்வி புலன்களின் கீழ் 28 துறைகளைக்கொண்டு சிறந்து விளங்குகிறது. தேசிய தர மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலின் ஆய்வில், ‘ஏ ப்ளஸ்’ தர அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. தேசிய நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியலின்படி, கடந்த மூன்று ஆண்டுகளாக நூறு சிறந்த பல்கலைக்கழகங்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

மேலும், மத்திய அரசின் உயிரித் தொழில்நுட்பத் துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சிக் கழகம், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் போன்ற பல்வேறு ஆய்வு நிறுவனங்களிடமிருந்து பல்வேறு மானியங்களைப் பெற்று, பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்கான குறியீடான, எச் இன்டெக்ஸ் அளவுகோலில், 2025 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் வரை 84 ஆக உயர்ந்துள்ளது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் சிறந்து விளங்குவதோடு கல்வியின் பலன்களை, இந்தியாவின் கிராமப்புறங்களை சென்று சேர்க்கும் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்கி வருகின்றது.

நிகழ்ச்சி ஏற்பாடு : முனைவர் பொன். கதிரேசன்!

# ஆசிரியர்கள் தின பெரு விழா-முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா!

## கே.ஆர்.என்.ராஜேஷ் குமார் எம்.பி., அமைச்சர் மா. மதிவேந்தன், வி.எஸ். மாதேஸ்வரன் எம்.பி.- ரெ.தங்கம் பங்கேற்பு!

நாமக்கல், செப்.5 -

பன்னாட்டு தமிழ் ஆளுமையர்கள் கூட்டமைப்பு, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம், மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வி விழிப்புணர்வு தொண்டு நிறுவனம்,

பன்னாட்டு மாற்றுத்திறன் ஆசிரியர்கள் பேராசிரியர்கள், அலுவலர்கள் நல சங்கம் இணைந்து நடத்தும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா,

மாற்றுத்திறனாளிகளுக்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி அறிவிப்பு பெருவிழா, ஆசிரியர்கள் தின விழா,

“நாமக்கல் மாவட்டம் ராசிபுரம், சேலம் ரோட்டில் அமைந்துள்ள சுஜிதா திருமண மண்டபத்தில் இன்று (5.9.2025-வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு நடைபெறுகிறது”.

இவ்விழாவினை நாமக்கல் நாவுக்கரசு, ஆளுமை கருத்தரங்க தலைமை ஒருங்கிணைப்பாளர், பேராசிரியர், டாக்டர் பொன்.கதிரேசன் ஏற்பாடு செய்துள்ளார்.

இவ்விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் கேஆர்என். ராஜேஷ்குமார் எம்பி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சு. விமலா,கழக மாற்றுத்திறனாளிகள் மாநிலத் தலைவர் ரெ.தங்கம் ஆகியோர் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கியும், மாற்றுத்திறன் வாழ்வில் வழிகாட்டி நூல்களை வெளியிட்டும்,சிறந்த ஆளுமை ஆசிரியர்களை பாராட்டி சிறப்பித்து சிறப்புரையாற்றுகின்றனர்.

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில இணை பொதுச் செயலாளர் என். அம்பாள் குமார் வரவேற்று பேசுகிறார்.

மேலும், இப்பெருவிழாவில் நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம் , சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே. பொன்னுச்சாமி, நாமகிரிப்பேட்டை ஒன்றிய செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கேபி. ராமசுவாமி, நாமக்கல் மநகராட்சி மேயர் து.கலாநிதி, சென்னை மாநகர காவல் துணை ஆணையர் பெ. சாமிநாதன், கழக மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சி.ஆனந்தகுமார், பொதுக் குழு உறுப்பினர் டாக்டர் இரா. மாயவன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் க. கலைச்செல்வி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ப. மகேஸ்வரி, முன்னாள் நீதி அரசர்.விடியல் குகன் என்ற கு.கருணாநிதி, தனித் துணை ஆட்சியர் ச. பிரபாகரன்,ராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர் ஆர். கவிதா சங்கர், வட்டாட்சியர் க. சசிகுமார் மற்றும் ஆசிரியர் பெருமக்களும், பேராசிரியர் பெருந்தகையர்களும், தமிழ் அறிஞர்களும், ஏராளமான மாற்றுத் திறனாளிகள் பங்கேற்று வாழ்த்துரை வழங்க உள்ளனர்.

கருத்தரங்குகளும் நடைபெற உள்ளன. 700க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட உள்ளன. விழா நிறைவில் பன்னாட்டு தமிழ் ஆளுமைகள் கூட்டமைப்பு மாநில பொருளாளர் முல்லை அ.சரவணன் நன்றியுரை ஆற்றுகிறார்.



தூத்துக்குடி மாவட்டம், புன்னைக்காயலில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தனது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 17.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டடம் மற்றும் காயாமொழியில் தனது நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவற்றை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் உள்ள பள்ளிகளில் 1.5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணியினை, காயாமொழியில் உள்ள சி.பா.ஆதித்தனார் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி வைத்தார். உடன், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர். எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், ஒன்றிய செயலாளர் சதிஸ்குமார், ஏ.பி.ரமேஸ், ஆழ்வை சேர்மன் ஜனகர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



தேனி மாவட்டம், தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் (03.09.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ரூ.3.40 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 8 புதிய மருத்துவ கட்டிடங்களை திறந்து வைத்து, ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் 2 புதிய மருத்துவ கட்டிட கட்டுமானப் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங்,தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன் (கம்பம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்) ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டினார்.

கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



கலவை பேரூர்,
இராணிப்பேட்டை மாவட்டம்.



செய்யாறு மேற்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



முதுகுளத்தூர் மத்திய ஒன்றியம்,
இராமநாதபுரம் மாவட்டம்.



நிலக்கோட்டை வடக்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



சூலூர் வடக்கு ஒன்றியம்,
கோவை தெற்கு மாவட்டம்.